## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (29.10.2022 முதல் 02.11.2022)

**அறிக்கை எண்: 86/2022** **தேதி: 28.10.2022**

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 °செ முதல் 24 °செ ஆகவும் பதிவானது.

### பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (29.10.2022 முதல் 02.11.2022)

| கடந்த வார வானிலை (25.10.2022 முதல் 27.10.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (29.10.2022 முதல் 02.11.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 25/10 | நாள்-2 26/10 | நாள்-3 27/10 | தேதி | நாள்-1 29/10 | நாள்-2 30/10 | நாள்-3 31/10 | நாள்-4 01/11 | நாள்-5 02/11 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 8 | 8 | 6 | 18 |
| 32 | 33 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 31 | 31 | 31 | 30 |
| 24 | 24 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 24 | 23 |
| 4 | 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 6 | 5 | 7 |
| 86-53 | 87-59 | 68-45 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-55 | 80-65 | 80-65 | 80-65 | 85-70 |
| 8 | 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 14 | 12 | 12 |
| மேற்கு வட மேற்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வடக்கு | மேற்கு | வட வட மேற்கு |

### பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 30.10.2022 முதல் 02.11.2022 ஆகிய தினங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 °செ முதல் 32 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12-14 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும் |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதைத் தவிர்க்கவும் |
| | | வரும் நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் / தள்ளிப்போடவும் |
| நெல் | நாற்றாங்கால் | தற்போது சம்பா நடவுவிற்க்கு தயாராக இருக்கும் நாற்றாங்காலுக்கு முறையான வடிகால் வசதி அமைத்து நாற்றுக்களின் சேதத்தை தவிர்க்கவும். |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | ஆடு, மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் லேசானது முதல் மிதமானது மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்

**இயக்குநர்**